தினமலர்
புதுச்சேரி | புதன் | 27.12.2023

# ஜிப்மரில் 1,500 ரோபோடிக் அறுவை சிகிச்சை

## கண்காணிப்பாளர் துரைராஜன் தகவல்

புதுச்சேரி, டிச. 27–

ஜிப்மரில் கடந்த ஆறு ஆண்டுகளில் 1,500க்கும் மேற்பட்ட ரோபோடிக் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன் தெரிவித்தார்.

புதுச்சேரி, ஜிப்மரில் உள்ளிருப்பு பயிற்சி மருத்துவர்களுக்கு, ரோபோடிக் அறுவை சிகிச்சை பயிற்சி வகுப்பு நடந்தது. இந்நிகழ்ச்சி நிறுவன இயக்குநர் ராகேஷ் அகர்வால், மருத்துவ கண்காணிப்பாளர் துரைாஜன் ஆகியோரின் ஊக்கத்தில் நடத்தப்பட்டது.

டாவின்சி ரோபோடிக் அறுவை சிகிச்சை முறையில் நடத்தப்படும், இந்த பயிற்சி வகுப்பு, நாட்டில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களில் முதன் முறையாக நடத்தப்பட்டது. மருத்துவர்கள் புதிய தொழில்நுட்பத்துடன் பரிச்சயம் பெறவும், அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கு உதவுவது மட்டுமின்றி, எளிய நடைமுறைகளை செய்யவும் இப்பயிற்சி பயன்படுகிறது.

நிகழ்ச்சியில், மருத்துவக்கண்காணிப்பாளர் துரைராஜன் பேசுகையில், 'இப் பயிற்சி, உள்ளிருப்பு மருத்துவர்களின் திறன்களை மேம்படுத்தவும், ஜிப்மர் நோயாளிகளுக்கு அளிக்கும் சிகிச்சையின் தரத்தை மேம்படுத்த உதவுகிறது. ஜிப்மரில், கடந்த ஆறு ஆண்டுகளில், 1,500க்கும் மேற்பட்ட ரோபோடிக் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன என்றார்.